Kalanjiyam International Journal of Tamil Studies
களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
Issue DOI: https://doi.org/10.63300/tirjts06012026
https://ngmtamil.in/

# An Intellectual Movement Perspective on 'Sanjeevi Parvathathin Saaral'

**Dr.A.Karvannan***,
Assistant Professor, Department of Tamil, Agurchand Manmull Jain College, Meenambakkam, Chennai-600061.
*Correspondence: karvannan.a@amjaincollege.edu.in,

**Article Info**
Received on 20-April-2026, Revised on 27-April-2026, Accepted on 28-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

The Tamils led a natural lifestyle deeply integrated with nature. However, Sanskrit Puranas and epic narratives exerted a significant impact on the self-respecting intellectual tradition of the highly civilized Tamil society. Consequently, Varnasrama concepts infiltrated the Tamil tradition, giving rise to caste and religious divisions. At the peak of this influence, superstitious practices became dominant, creating a thoughtless societal trend that led to a setback for Tamil society.

During the 18th and 19th centuries, influenced by Western art and literature, Tamil scholars rediscovered their rich heritage. They began opposing the Puranic and epic literatures responsible for these divisions and ventured into creating counter-rationalist literature. This resulted in a massive social revolution on Tamil soil.

Among those who laid the foundation for this social revolution, Pavendar Bharathidasan is highly prominent. His work 'Sanjeevi Parvathathin Saaral' (The Slopes of Sanjeevi Hills) can be considered a piece of literature that directly countered the epics and Puranas to create a powerful impact. This research article lucidly presents the concepts of equality, women's rights, rationalism, and universal humanism expounded in this short epic poetry with appropriate evidence.

***KEYWORDS:*** *Sankhya, Kapila, the original (Prakriti), Purudan, the three gunas, twenty-fivtheories, Satkariya theory.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# அறிவியக்க நோக்கில் சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

***முனைவர் அ. கார்வண்ணன்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, சென்னை – 600061.

**ஆய்வுச்சுருக்கம்**

இயற்கையோடு இயைந்த இயல்பான வாழ்முறையை மேற்கொண்டவர்கள் தமிழர்கள். மேம்பட்ட நாகரிக வளர்ச்சியை அடைந்த தமிழ்ர்களின் தன்மானம் மிக்க அறிவுமரபில் வடமொழி புராண, இதிகாசக் கதைகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. அவற்றினால் வர்ணாசிரம கருத்துக்கள் தமிழ் மரபில் ஊடுருவி சாதி, மத பிரிவினைகளை உருவாகின. இவற்றின் உச்சமாக மூடபழக்கவழக்கங்கள் மேலோங்கியதால் சுயசிந்தனையற்ற சமூகப் போக்கு தமிழ்ச்சமூகத்திற்குப் பின்னடைவை ஏற்படுத்தியது. 18,19 ஆம் நூற்றாண்டுகளில் மேலைநாட்டு கலை, இலக்கியத் தாக்கத்தால் தமிழ் மரபினை மீளுணர்ந்த தமிழறிஞர்கள் இதற்கு அடிப்படையான புராண, இதிகாச இலக்கியங்களை எதிர்க்கவும் அதற்கு எதிரான பகுத்தறிவு இலக்கியங்களைப் படைக்கவும் முற்பட்டனர். இதன் விளைவாகத் தமிழ் மண்ணில் மிகப்பெரிய சமூகப்புரட்சி உருவானது. அவ்வாறான சமூகப் புரட்சிக்கு வித்திட்டவர்களுள் பாவேந்தர் பாரதிதாசன் மிக முக்கியமானவர். இவரின் படைப்பான 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' புராண, இதிகாசத்தினை மறுத்து நேரடியான தாக்கத்தினை உண்டு பண்ணிய ஒரு இலக்கியமாகக் கொள்ள இயலும். இக்கவிக்குறுங்காவியத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ள சமத்துவம், பெண்ணுரிமை, பகுத்தறிவு மற்றும் உலகளாவிய மனிதநேயம் குறித்த கருத்துக்களை இக்கட்டுரை எளிமையாக உரிய சான்றுடன் எடுத்தியம்புகின்றது.

**கருவிச் சொற்கள்**

அறிவியக்கம், பகுத்தறிவு, சமத்துவம், பெண்ணுரிமை, சாதி ஒழிப்பு, தீண்டாமை, பரிணாம வளர்ச்சி, சமூக நீதி, அறிவுப்பாரம்பரியம், பாலின சமத்துவம், மூடப்பழக்கம், தடுப்பரண், தர்க்கம், கருத்துமோதல், அறைகூவல், மீளுணர்வு.

**முன்னுரை**

இருபதாம் நூற்றாண்டின் தமிழிலக்கியப் பரப்பில் ஒரு சகாப்தமாகத் திகழ்ந்தவர் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன். இவருடைய இலக்கியப் படைப்புகள் அனைத்தும் வெறும் கற்பனை நயங்களால் உருவானது மட்டுமல்ல. மாறாக, நடைமுறையில் உள்ள சமூகப் பிரச்சினைகளை மையமிட்டவை. சமூக முன்னேற்றத்தினை முன்னிறுத்தி படைக்கப்பட்டவை. அந்த வகையில், 1930-ஆம் ஆண்டில் வெளிவந்த பாரதிதாசனின் முதல் கவிக்குறுங்காவியமான 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்', சமத்துவம், பெண்ணுரிமை, பகுத்தறிவு மற்றும் உலகளாவிய மனிதநேயம் ஆகியவற்றை ஒருசேரப்பேசும் ஒரு முன்னோடிப் படைப்பாகும். இக்காவியத்தில்

எடுத்துரைக்கப்பட்டுள்ள சமத்துவக் கருத்துக்களை அணுகி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகிறது.

**வரலாற்று அரசியல் பின்னணியில் சஞ்சீவி பர்வதத்தின் சாரல்**

1930-களின் தொடக்கம் என்பது தமிழக வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகக் கருதப்பட்ட காலம். இந்திய விடுதலைப் போராட்டம் ஒரு புறம் தீவிரமடைந்திருந்த நிலையில், தமிழகத்தில் சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு மற்றும் பெண்ணடிமைத்தனம் ஒழிப்பு ஆகியவற்றை வலியுறுத்தி சுயமரியாதை இயக்கம் பெரும் புரட்சி செய்துகொண்டிருந்து. பகுத்தறிவை முன்னிறுத்திய இவ்வியக்கத் தாக்கத்தின் சாரமாக 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' எனும் இக்காவியம் படைக்கப்பட்டது. இதனை,

***தாழ்வகற்ற எண்ணுங்கால் சாக்குருவி வேதாந்தம்***
***சாதிப் பிரிவு சமயப் பிரிவுகளும்***
***நீதிப்பிழைகள் நியமப் பிழைகளும்,***
***மூடப் பழக்கங்கள் எல்லாம் முயற்சி செய்தே***
***ஓடச் செய்தால் நமையும் ஓடச் செய்வார் என்பேன்!*** (பாரதிதாசன் கவிதைகள்-ப. 6)

என்ற அடிகள் எடுத்தியம்புகின்றன. இந்நூல் முழுமையும் இது போன்ற கருத்துகள் நிரம்பி இருப்பது குறிப்பிடத்தக்கது. இது பாரதிதாசன் ஒரு தேசியவாதக் கவிஞர் என்பதிலிருந்து சமூகப் புரட்சிக் கவிஞராக மாறிய பரிணாம வளர்ச்சியைப் புலப்படுத்துகின்றது. ஆயினும், மரபிலக்கண அடிப்படையில் இக்காப்பியம் பஃறொடை வெண்பா என்னும் யாப்பு வடிவத்தில் இயற்றப்பட்டுள்ளது.

இயல் நாடகம் இயற்றுவதில் வல்லவரான பாரதிதாசன், சஞ்சீவி மலையை அனுமன் தூக்கிச் சென்றான் என்னும் புராணக் கதையைத் தொன்மமாகக் கொண்டு, அதன் சாரலிலேயே ஒரு புதிய விழிப்புணர்வை விதைத்திருப்பது அவரின் அங்கத நாடகப் பாணிக்குச் சிறந்த சான்றாகும். அத்துடன், புராணங்கள் கட்டமைத்த மாயைகளை உடைத்தெறிந்து, பகுத்தறிவு கொள்கையின் மூலம் அறிவியலையும் சமூக நீதியையும் நிலைநாட்ட இக்காப்பியத்தை மக்களுக்கான மேடையாகப் பயன்படுத்தியிருக்கின்றார். இதனை,

***"பொய்யுரைப்பார் இந்தப்புவியை ஒரு சிற்றெறும்பு***
***கையால் எடுத்த தென்பார் ஐயோ ! என்றஞ்சுவதோ***
***ராமாயணம் சொல்லி நாளைக் கழிக்கின்ற***
***ஏமாந்தார் காசுக் கெசமானன் என்றுரைக்கும்***
***பாகவதன் சொன்னான் பலபேரைக் கூட்டியே.***
***ஆகியதும் இந்த அரிய உழைப்புக்குப்***

***பத்தோ பதினைந்தோ பாகவதன் பெற்றிடுவான் .***
***சித்தம் மலைக்கச் சிறிது மிதில் இல்லை:***
***பகுத்தறிவுக் கொவ்வாத ஏடுகளால்***
***எள்ளை அசைக்க இயலாது. மானிடர்கள்***
***ஆக்குவதை ஆகா தழிக்குமோ? போக்குவதைத்***
***தேக்குமோ? சித்தம் சலியாத்திறன் வேண்டும்.***
***மக்கள் உழைப்பில் மலையாத நம்பிக்கை***
***எக்களிக்க வேண்டும் இதயத்தில்! ஈதன் றி***
***நல்லறிவை நாளும் உயர்த்தி உயர்த்தியே***
***புல்லறிவைப் போக்கிப் புதுநிலை தேடல் வேண்டும்"***

(பாரதிதாசன் கவிதைகள் - ப. 10)

என்ற பாரதிதாசனின் பகுத்தறிவு அடிகள் பறைசாற்றுகின்றன. மேலும், இக்கருத்துருவாக்கம் தமிழ் அறிவுப்பாரம்பரியத்தின் உண்மை உருவை எடுத்துரைக்கும் வகையில் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன், உழைப்பு உண்மையானது, அதன் மீது மக்கள் எக்காலத்தும் நம்பிக்கைக் கொள்ளவேண்டும். இடைக்காலத்தில் புகுத்தப்பட்ட மூடப்பழக்க வழக்கங்களை முற்றிலும் கைவிட்டு பகுத்தறிந்து பின்பற்றும் புத்தறிவு பெற்று மடமையிலிருந்து தமிழர்கள் மீளவேண்டும். இதனையே பாவேந்தர் பாரதிதாசன் இக்காவியத்தின் தலையாய நோக்கமாக எடுத்துரைக்கிறார்.

**சமத்துவக் குறியீடு- சஞ்சீவி பர்வதத்தின் சாரல்**

'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' என்ற தலைப்பே ஒரு ஆழமான பொருளைத் தன்னுள் கொண்டுள்ளது. இலக்கண அடிப்படையில் இதனை ஆராயும்போது, 'சஞ்சீவி பர்வதம் + அத்து + இன் + சாரல்' எனப் பிரிக்கலாம். இதில் 'அத்து' என்பது சாரியை. இவ்வாறான பிரிப்பு 'இனிமையான சாரல்' என்னும் பொருளைத் தருகிறது. மலை என்பது வலிமைக்கும், அசைக்க முடியாத மரபுகளுக்கும் குறியீடாக அமையும் போது, அதன் சாரல் என்பது வளமான பகுத்தறிவுப் பார்வையாகக் குறிக்கப்பட்டிருப்பது உற்றுநோக்கத்தக்கது.

பாரதிதாசன் இக்காவியத்தில் இயற்கையை வெறும் அழகியல் பொருளாக மட்டும் பார்க்காமல், அதனைப் பண்பாட்டு முரண்களை விளக்கும் குறியீடாகவும் பயன்படுத்தியுள்ளார். 'மலை' என்பது வறண்ட கல் மற்றும் அறிவற்ற வலிமையைக் குறிப்பதாகவும் 'சாரல்' என்பது செழுமையையும் அறிவின் வளர்ச்சியையும் குறிப்பதாகவும் படைக்கப்பட்டுள்ளது. இத்தர்க்கத்தை நாம் கதாபாத்திரங்களின் இயல்போடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மேலும் பல உண்மைகள் வெளிப்படுகின்றன.

**அறியாமையின் அடையாளக் குறியீடு : குப்பன்**

இக்காப்பியத்தின் மையக் கதாபாத்திரங்கள் குப்பன் மற்றும் வஞ்சி. இவர்களின் பெயர்களும் இயல்புகளும் பாரதிதாசன் விரும்பி முன்னிறுத்தும் சமத்துவக் கொள்கையின் பல்வேறு பரிமாணங்களைப் பிரதிபலிக்கின்றன. அந்தவகையில், அறியாமையின் அடையாளக் குறியீடாக குப்பன் எனும் ஆண் கதாப்பாத்திரத்தைப் படைத்துக்காட்டியிருக்கிறார். அத்துடன், பெண்ணை தனது கட்டுக்குள் வைத்து மேலாளுகைச் செய்ய நினைக்கும் ஆண்மையச் சமூகம்/புராண, இதிகாசங்களை நம்பும் பகுத்தறியும் தன்மையற்ற தமிழ்ச்சமூகம் என பன்முகச் சாடலை முன்னிறுத்தியிருக்கிறார். இதனை,

*ஏனிங்கு நின் நீர்? எடுத்து வருவீர் மலையை”*
*என்ற இச் சத்தம் இவர் செவியில் வீழ்ந்தவுடன்*
*குன்று பெயர்வது கொஞ்சமும் பொய்யல்ல வென்று*
*குப்பன் நடு நடுங்கிக் கொஞ்சு மிள வஞ்சியிடம்*
*“மங்கையே, ராமனருள் வாய்ந்தவனாம்; வானமமட்டும்*
*அங்கம் வளர் வானாம்; அப்படிப்பட்டவனை*
*இந்தச் சஞ்சீவி மலை தன்னையெடுத்து வர*
*அந்த மனிதன் அங்கே ஆணையிடுகின் றான்.*
*நாலடி.யில் இங்கு நடந்து வந்து நாம் மலையின்*
*மேலிருக்கும் போதே வெடுக்கென்று தூக்கிடுவான் .*
*இங்கு வருமுன் இருவரும் கீழ் இறங்கி*
*அங்குள்ள சாரல் அடைந்திடுவோம் வா' வென்றான்*

(பாரதிதாசன் கவிதைகள் - ப. 8)

என்ற இவ்வடிகள் ’குப்பன்’ என்ற கதாப்பாத்திரத்தை மூடப்பழக்கவழக்கத்தின் குறியீடாக காட்சிப்படுத்துகிறது.

குப்பன் என்பவன் ஒரு வேடர்குல ஆண்மகன். அவன் உடல் வலிமை கொண்டவன், ஆனால் சிந்தனை நிலையில் புராணக் கதைகளையும், ஆடவர் மேலாதிக்கச் சிந்தனைகளையும் அப்படியே ஏற்று நம்புபவன். அவன் தன்னைச்சுற்றி அவநம்பிக்கை நிலவும்போது அதுகுறித்து பகுத்தறியாதவனாக/கேள்வி எழுப்பாதவனாக நிற்கிறான். இதனை உடல்/மன வலிமை மிக்க தமிழ்ர்கள் அறிவு மயங்கி "செப்புச் சிலை போல" அசையாமல் நிற்பதாக, அந்த பாத்திரத்தை படைத்துக்காட்டுகிறார் பாவேந்தர் பாரதிதாசன். சிலை என்பது உயிரற்ற, மாற்றங்களுக்கு இடமளிக்காத ஒரு நிலைப்பாட்டை உணர்த்தும் ஒரு உவமை. இதன் வழி, அவன் சஞ்சீவி மலையின் புராணத் தன்மையை நம்புகிறான் என்பதையும் பெண்ணைத் தன் விருப்பத்திற்குப் பணிந்து போக வேண்டியவளாகக் கருதுகிறான் என்பதையும் தமிழ்மரபிற்கு ஒவ்வாத இடைக்காலத்தில் நுழைந்த

வடமொழி இலக்கியம் எடுத்துரைக்கும் வழக்கத்தின் சான்றாக எடுத்துரைக்கின்றார். அத்துடன், ஆண் என்பவன் வீரத்தின் குறியீடாக குறிக்கும் தமிழ்ப்பண்பாட்டின் மேலாதிக்க நிலையை மாற்றியமைக்கும் பாவேந்தர் பாரதிதாசனின் முயற்சி. இது பாலின சமத்துவத்தின் அடிப்படை. மேலும், இது தமிழ்ச் சமூகத்தின் அனைத்துச் சமத்துவத்திற்கான அடிப்படைத் தேவை. அத்தேவையைச் சஞ்சீவி பர்வதத்தின் சாரல் எனும் இக்காவியத்தின் வழி எடுத்தியம்புகிறார்.

**அறிவியக்கத்தின் அடையாளக் குறியீடு : வஞ்சி**

அறிவுமரபின் ஆகச்சிறந்த அடையாளமாகப் படைக்கப்பட்ட தமிழ்ப்பெண் கதாப்பாத்திரம் வஞ்சி. அறியாமையில் மூழ்கிக்கிடக்கும் மக்களின் அடையாளக் குறியீடாகப் படைக்கப்பட்ட குப்பனின் காதலி. மடமையால் பீடிக்கப்பட்ட மக்களை மாற்ற நினைக்கும் பகுத்தறிவு. இவள் காதலியாக மட்டும் இல்லாமல், குப்பனுக்கு அறிவூட்டும் ஆசிரியராகவும், பகுத்தறிவின் வடிவமாகவும் சித்திரிக்கப்பட்டிருக்கிறாள். வஞ்சி, உடலளவில் மென்மையானவள் ஆனால், அறிவளவில் மலை உச்சியைக் காட்டிலும் உயர்ந்தவளாகக் காட்டப்பட்டிருக்கிறாள்.

'சஞ்சீவி பர்வத்தின் சாரல்' காவியத்தில் வஞ்சி சாரலைப் போன்றவள் – அதாவது வளம் மிக்கவள். குப்பன் அவளைத் தொட வரும்போது "தொடாதீர்கள்" என்று அவள் சொல்லும் சொல், உடல் ரீதியான விலகல் மட்டுமல்ல, அது ஒரு சித்தாந்த ரீதியான தடுப்பரண். ஆண்-பெண் உடல்பொருத்தம் என்பது இயல்பானது. அதில் சிறப்பு ஏதுமில்லை. அறிவு பொருத்தம் என்பது நாகரிக வளர்ச்சியின் வெளிப்பாடு. இதுவே மனிதகுலத்தை அடுத்தடுத்த வளர்ச்சி நிலைக்கு இட்டுச்செல்வதாகும். ஆகவே, அறிவு நிலையில் சமத்துவம் ஏற்படாமல் உடல் ரீதியான பிணைப்பு முழுமையடையாது என்பதை தமிழ்ப்பெண் வஞ்சி உணர்த்துவதாகப் படைத்திருக்கிறார் பாவேந்தர் பாரதிதாசன். மேலும், பெண் என்பவள் மறு உற்பத்திக்கான உடலாக பார்க்கப்படுபவள் என்ற வழக்கமான பிம்பத்தை உடைத்தெறிந்திருக்கிறார்.

இந்த இரு கதாபாத்திரங்களுக்கு இடையிலான உரையாடல் இக்காப்பியத்தின் உயிர். இது வெறும் காதல் உரையாடல் அல்ல; இது மூடப்பழக்க வழக்கத்தில் மூழ்கிக்கிடக்கும் சமூகத்திற்கும் புதிய அறிவியக்கமான பகுத்தறிவிற்கும் இடையிலான கருத்து மோதல். இதற்கான சான்றாக,

**"ராமனெங்கே! ராமன் அருளெங்கே! சஞ்சீவி**
**மாமலையைத் தாக்குமொரு வல்லமை எங்கே? இவற்றில்**
**கொஞ்சமும் உண்மை இருந்தால் நாம் கொத்தவரைப்**
**பிஞ்சுகள் போல் வாடிப் பிழைப்பரிதாகி**
**அடிமையாய் வாழோமே? ஆண்மைதான் இன்றி**
**மிடிமையில் ஆழ்ந்து விழியோமே?** (பாரதிதாசன் கவிதைகள் - ப. 9)

என்ற அடிகள் அமைந்திருக்கின்றன. மேலும், இவை மூடநம்பிக்கையில் மூழ்கிக்கிடப்பவர்களின்

தன்மானத்தைத் தட்டியெழுப்பி உண்மையை உணரச்செய்வனவாகவும் இருக்கின்றன.

சமத்துவத்தை அடைவதற்குப் பகுத்தறிவு மிக முக்கியமான கருவியாகும். 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' எனும் இக்காப்பியத்தில், அனுமன் மலையைத் தூக்கி வந்தான் என்ற புராணக் கதையை 'வஞ்சி' கதாப்பாத்திரத்தின் வழி தர்க்கரீதியாக அணுகுகிறார் பாவேந்தர் பாரதிதாசன். அதாவது, இராமாயணச் சொற்பொழிவு ஒன்றைக் கேட்கும் போது, அனுமனின் வானளாவிய உருவம் மற்றும் மலைகளைத் தூக்கும் வலிமை பற்றி சொல்லப்படுவதைக் கேட்டு குப்பன் பயந்து நடுங்குகிறான்; வஞ்சி அவனின் அறியாமையைக் கண்டு நகைக்கிறாள். இந்த நகைப்பின்வழி, கற்பனைக் கதைகளால் மனித சமூகத்திற்கு எந்தப் பயனும் இல்லை என்பதையும் மலையைப் பெயர்க்கும் ஆற்றல் எந்த மனிதனுக்கும் இல்லை என்பதையும் இத்தகைய கதைகள் மக்களின் உழைப்பையும் வீரத்தையும் மழுங்கடிக்கச் செய்கின்றன என்பதையும் பாரதிதாசன் விளக்குகிறார். இதன் முடிவாக, "மூடப்பழக்கம், முடிவற்ற கண்ணுறக்கம் ஒழிவதென்றோ?" என்ற அவரின் ஆதங்கத்தை ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகத்திற்கும் பாரதிதாசன் விடுக்கும் அறைகூவலாகக் கொள்ள இயலும்.

**முடிவுரை**

பகுத்தறிவுவாதம் என்பது வெறும் தத்துவமாக மட்டும் சுருங்காமல், சமூக மாற்றத்திற்கானதொரு கருவியாக உருவெடுத்ததற்கு 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' போன்ற இலக்கியங்கள் மிக முக்கிய பங்காற்றியிருக்கின்றன. இவைபோன்ற நயம் மிக்க படைப்புகளால் மக்கள் விழிப்புணர்வு பெற்று பகுத்தறிவுப்பாதையில் பயணிக்கத் தொடங்கியிருக்கின்றனர். இது தமிழ்ச்சமூக வரலாற்றில் ஒரு பெரிய திருப்பு முனையை உண்டு பண்ணியிருக்கிறது. மதத் தலைவர்களும் நிலப்பிரபுக்களும் இணைந்து கொண்டு 'கடவுளின் கட்டளை', 'விதி', 'கர்ம வினை' எனப் பல ஏமாற்று வார்த்தைகளைக் கூறி உழைக்கும் மக்களைச் சுரண்டுவதை எதிர்த்தும் முறியடித்தும் பெரும் புரட்சி செய்திருக்கின்றது. இத்தகைய நிலை உருவாவதற்கும் மூடநம்பிக்கைகளிலிருந்து மக்களை விடுவித்து, சமூக நீதியை நிலைநாட்டுவதற்கும் பகுத்தறிவினை மையமிட்ட அறிவியக்கம் என்பது காலத்தின் கட்டாயமாக இருந்திருக்கிறது. அவ்வியக்கத்திற்கான ஆயுதமாக இலக்கியங்கள் இருந்திருக்கின்றன. அந்த வகையில் அறிவியக்க நோக்கில் 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' எனும் இக்கவிக்குறுங்காவியம் தமிச்சமூக முன்னேற்றத்திற்கு பெரும் பங்காற்றியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

***துணைநூல் பட்டியல்***

[1.] பாரதிதாசனின் மார்க்சியம், ஜெகநாதன். ஆ, அகரம் வெளியீடு, கும்பகோணம், 1996.

[2.] பெரியார் களஞ்சியம்(ஆறாம் தொகுதி), கி. வீரமணி (தொ. ஆ), பெரியார்

[3.] சுயமரியாதை பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை – 7, 1991.

[4.] பாரதிதாசனும் பொதுவுடைமைத் தத்துவமும் பாவேந்தரும் மொழிபெயர்ப்பும்,

[5.] மருதநாயகம், ப. (பதிப்பு), தமிழ்ப் பல்கலைக்கழகம்- தஞ்சாவூர், 2003.

[6.] பாரதிதாசன் கவிதைகள், பரமசிவன். தொ(தொ. ஆ), நியூ சென்சூரி புக் ஹவுஸ்,

[7.] சென்னை. 1992.

[8.] காலந்தோறும் பெண், ராஜம் கிருஷ்ணன், தாகம் பதிப்பகம், சென்னை -17, 1994